கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013 / 2014 (ஜனவரி - 2018)

## OHY 2163 Laws and Customs of Sri Lankan Tamils

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

### பகுதி – I

01. மேல்வரும் சொற்களுக்கான அரும்பத விளக்கத்தினை எழுதுக.

(அ) தலையாரி
(ஆ) முத்தெட்டு
(இ) கங்காணி
(ஈ) பண்டாரப்பிள்ளை
(உ) தாலித்தியம்
(ஊ) மகர்
(எ) பட்டங்கட்டி
(ஏ) கைக்கூலி
(ஐ) சர்ம வசனம்
(ஒ) மண்ணாங்கட்டி

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. தேசவழமைச் சட்டத்திலுள்ள மேல்வரும் அதிகாரங்களைச் சுருக்கமாக விளக்குக.

(அ) சுதந்திரங்களும் ஆதன உரிமையும் (10 புள்ளிகள்)
(ஆ) காணிகள், தோட்டங்கள் முதலானவைகளின் ஆட்சி (10 புள்ளிகள்)

03. முக்குவர் சட்டக்கோவையை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) முக்குவர் சட்டத்தின் உற்பத்தி (10 புள்ளிகள்)
(ஆ) தாய்வழி முதுசொமான ஆதனங்களின் உரிமை வகை (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. முக்குவ சட்டக்கோவையில் சொத்துடைமைகளின் வகைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

05. திருகோணமலைப் பிராந்தியத்திலே இன்றுவரை நிலைபெறுகின்ற மரபுகள், வழமைகள் குறித்து கூறப்படும் விடயங்களை முதலியார்களின் குறிப்புக்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்க. (20 புள்ளிகள்)

06. இஸ்லாமிய சட்டக்கோவையிலே விபாக சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)

07. புத்தளம், கற்பிட்டி தமிழர்களின் வழமைகள், பண்பாட்டம்சங்கள் குறித்து ஒரு வரலாற்றுக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)